**15.07.2025**

**O.S.No.142/2012**

**வா.சா.2: வெங்கடாஜலம்**

**<u>1,4,6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

**1)** வேணுகோபாலின் அண்ணன் பெயர் தெரியவில்லை. அவர்கள் அனைவரும் ஒரே வீட்டில் தான் குடியிருந்தார்கள். வேணுகோபால் பெயருக்கு அவருடைய அண்ணன் தம்பிகள் சுமார் 50 வருடங்களுக்கு முன்பு கிரயம் செய்து வைத்து விட்டு சென்று விட்டார்கள். வேணுகோபாலின் அண்ணன் தம்பிகள் என்ன வேலை செய்தார்கள் என்றால் விவசாயம் தான் செய்தார்கள்.

2)தொழில் எதுவும் செய்யவில்லை. வேணுகோபாலின் அப்பா பிரதிவாதியின் தகப்பனாருக்கு பணம் கொடுத்து தொழில் தொடங்க முதலீடு செய்தார் என்று சொல்லியுள்ள விவரம் பற்றி எனக்கு தெரியாது. வேணுகோபாலின் அப்பா இறந்து விட்டார் என்றால் எனக்கு தெரியும். எத்தனை வருடத்திற்கு முன்பு எப்போது இறந்தார் என்பது எனக்கு தெரியாது. வாதி குடியிருக்கும் வீடு மற்றும் காலி மனை உள்ளது. அதை வேணுகோபாலின் அண்ணன் தம்பி தான் குதவை வைத்தார்கள். அதை ரத்து செய்து சுமார் 50 வருடம் ஆகும். வேணுகோபால் தான் ரத்து செய்தார். நான் அப்போது உடன் சென்றிருந்தேன்.

3)அந்த பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டு இருந்தேன். அந்த குதவை சுவாதீன குதவை என்றால் சரிதான். குதவை வைத்த காலத்தில் இருந்து திருப்பும் வரை வேணுகோபால் அந்த இடத்தில் இல்லை. திருப்பிய பின்னிட்டு தான் வந்தார். இந்த சொத்து எப்போது வாங்கினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. இந்த சொத்தை எப்போது குதவை வைத்தார்கள் என்றால் தெரியாது.

4) வாதி சொல்லியதன் பேரில் குதவை வைத்ததை சொன்னார். எந்த வருடம் கூட்டி சென்று குதவை ரத்து செய்தார் என்று தெரியாது. எனக்கு மேற்படி வழக்கு சொத்துகள் பற்றியோ யாரிடம் இருந்து வாங்கப்பட்டது என்பது பற்றியோ அதில் என்ன தரப்பினரர்களால் மேற்கொண்டது பற்றியோ எனக்கு தெரியாது என்றும் வாதி கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.07.15 18:08:47 +0530

**Subordinate Judge, Attur.**